1982 பிப்ரவரி 8]

(இ) ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக்கொள்வது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே, ஆளுனர் உரையின்போது கவன ஈர்ப்புத் தீர்மானங்களும், ஒத்திவைப்புத் தீர்மானங்களும் எடுத்துக் கொள்வதில்லை என்று சொன்னீர்கள். ஆனால், இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். தவிரவும் ஆரம்பத்திலேயே நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். வாடிப்பட்டியில் ஒரு ஆசிரியை குறித்து எழுந்த பிரச்னையில் சர்வ கட்சி போராட்டம் குறித்து கொடுத்திருந்தேன்........(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் தொடர்ந்து கேட்டுக் கொண்டதன் பேரில் கடந்த 2, 3 நாட்களாக கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்து வருகிறோம். இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்கப் போகிறோம். தற்போது எல்லாமே சர்வ கட்சி முக்கியத்துவம் வாய்ந்ததாகத்தான் இருக்கிறது. இன்றைக்கு நான் எடுத்துக் கொள்ளும் விஷயத்தைக் கவனியுங்கள். அப்படி எடுத்துக்கொள்வதற்காக மகிழ்ச்சியடைய வேண்டும். உறுப்பினர்கள் சங்கடங்கள் அடையத் தேவையில்லை அவர் எழுதிக் கொடுத்தது என்னவாயிற்று என்று அறிய விரும்பினால், அதுவும் முறைப்படி ஒரு நாள் அவையில் எடுத்துக் கொள்ளப்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்று அல்ல, இன்று வேறு ஒரு சப்ஜெக்ட் எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

புதுக்கல்லூரி மாணவர்கள் ஒன்பது பேர் கல்லூரியிலிருந்து நீக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "சென்னையிலுள்ள புதுக்கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்களைக் கல்லூரியிலிருந்து நீக்கியதைக் கண்டித்து அனைத்துக் கல்லூரிகளைச் சேர்ந்த 2,000 மாணவர்கள் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளன்று கோட்டைக்கு ஊர்வலம் நடத்தியதாலும், அதைத் தொடர்ந்து நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடி வருவதாலும் இதனால் மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்